அலகு - 5

ஆளுமை

ஆளுமை - பொருள்

ஆங்கிலத்தில் ஆளுமையை குறிக்கும் பர்சனாலிட்டி என்னும் சொல் லத்தீன் வார்த்தையின் 'Persona' என்பதிலிருந்து. இதற்கு நாடகத்தில் அணியப்படும் முகமூடி என்று பொருள்.

ஆளுமை என்பது மனிதன் உடலியக்க, அறிவு, சிந்தனை, மனவளர்ச்சி, சமூக நீதி ஆகிய பண்புகளின் கூட்டமைப்பு ஆகும்.

ஆளுமையின் வரையறை

மனிதன் பாரம்பரியத்தினாலும் சூழ்நிலையாலும் பெற்றுள்ள உள்ளார்ந்த வன போக்குகள் உள்ள துடிப்புகள் செயல்முறைகள் உடல்பைகள் இயல்புக்கங்கள் ஆகியவற்றின் தொகுப்பே ஆளுமை
-வுட் வொர்த்

ஆளுமை என்பது ஒரு தனி மனிதன் தனக்கு கொடுக்கப்பட்ட சூழ்நிலையில் செயல்படும் தன்மையை கூறுவதாகும் -கேட்டல்

ஆளுமையின் பண்புகள்

1. ஆளுமை அளவிடப்படக்கூடியது
2. ஆளுமை தனித்தன்மை வாய்ந்தது
3. ஆளுமை சூழ்நிலைக்கு தக்கபடி சிறிதேனும் மாறும் தன்மையுடையது.
4. ஆளுமை என்பது மரபு நிலை சூழ்நிலை ஆகிய இரண்டின் விளை பயனே ஆகும்.
5. ஆளுமை நடத்தைக்கு ஒருமைப்பாட்டையும் முரண்பாட்டின்மையும் தருகிறது.

ஆளுமையை தீர்மானிக்கும் காரணிகள்

- உயிரியல் காரணிகள்
- சமூக காரணிகள்
- உளவியல் காரணிகள்

உயிரியல் காரணிகள்

1. உடல் சார்ந்த பண்புகள்
2. நாளமில்லா சுரப்பிகள்
3. நரம்பு மண்டலம்

சமூக காரணிகள்

1. குடும்பம் /வீடு
2. பள்ளிக்கூடம்

3. மொழி
4. பண்பாடு
5.

உளவியல் காரணிகள்

1. நுண்ணறிவு
2. ஊக்கம்
3. மனவளர்ச்சி
4. மனப்பான்மை
5. கவர்ச்சி
6. பற்று
7.

உயிரியல் காரணிகள்

உடல் சார்ந்த பண்புகள்
ஒருவரின் உடல் சார்ந்த பண்புகளான எடை உயரம் புறத்தோற்றம் பருமன் பலம் உடல் ஆரோக்கியம் உடல் குறைபாடுகள் வினோத நடத்தைகள் ஆகியவை அவனுடைய ஆளுமை மீது செல்வாக்கு செலுத்துகின்றது.
அழகற்றவர்.
உடல் ஊனமுற்ற குழந்தைகள் தாழ்வு மனப்பான்மையுடன்.
ஒல்லியானவர்கள் சுறுசுறுப்பாக இருப்பதை நாம் நடைமுறை வாழ்க்கையில் பெரும்பாலும் காணலாம்.
இது போன்ற காரணங்களால் குழந்தையின் தற்காரித்து பாதிக்கப்படுகிறது.
தற்கருத்து ஆளுமை வளர்ச்சி உடன் நேரடி தொடர்பு கொண்டது.

நாளமில்லா சுரப்பிகள்
நாளமில்லா சுரப்பிகளில் சுரக்கும் ஹார்மோன்கள் நேரடியாக ரத்தத்துடன் கலந்து நடத்தையை உருவாக்குகிறது. இச்சுரப்பிகள் ஒன்றை ஒன்று சார்ந்தும் ஒன்றோடொன்று இணைந்தும் செயல்படுவதால் உடல் உள்ள வளர்ச்சி மற்றும் மனவளர்ச்சி வளர்ச்சியிலும் பங்கு கொள்கின்றன.

நரம்பு மண்டலம்
ஆளுமை வளர்ச்சியில் புலன்கள் செயல்பாடு முக்கிய பங்கு வகிக்கின்றன. புலன்களின் செயல்பாடு நரம்பு மண்டலத்தை பொறுத்தது. புலன்களை அறிவின் வாயில்களாகும். நம்முடைய நுண்ணறிவு மிக்க செயல்பாடு உடல் வலு பொறுமை விரைவாக பொருத்தப்பாட்டினை பெற புதிய துலங்கல்களை வெளிப்படுத்த தயாராக இருத்தல் ஆய்வுத் திறன் சிந்திக்கும் திறன் போன்றவை யாவும் நரம்பு மண்டலத்தின் செயல் திறனை பொறுத்து அமையும். நரம்பு மண்டலத்தின் தாக்கம் ஒருவனது ஆளுமையை வெகுவாக பாதிக்கிறது.

சமூக காரணிகள்
குடும்பம் பள்ளிக்கூடம் போலி பண்பாடு ஆகியவை ஆளுமை மீது செல்வாக்கு செலுத்தும் சமூக காரணிகள் ஆகும்.
குடும்பம்

குடும்பத்தில் செயல்படும் பல்வேறு சக்திகள் குழந்தைகளின் ஆளுமை வளர்ச்சியில் பங்கு பெறுகின்றன.அவையாவன.

1. குழந்தைகளின் பெற்றோர்களின் மனப்பான்மை
2. பெற்றோர்களின் அளவுக்கு அதிகமான எதிர்பார்ப்பு
3. குறிப்பிட்ட பாலின குழந்தையை பெற்றோர் விரும்புதல்
4. பெற்றோர்களை இழத்தல்
5. பெற்றோர்களின் கல்வி சமூக பொருளாதார அந்தஸ்து
6. வீட்டில் உள்ள மற்ற காரணிகள்.

வீடு தொடர்பான நிகழ்ச்சிகள்

வீட்டில் உடன் இருப்போர் ஆகிய காரணிகள் ஆளுமை வளர்ச்சியில் பங்கு பெறுகின்றன.
ஒற்றை குழந்தைகள் வேலைக்காரர்களால் பராமரிக்கப்படும் குழந்தைகள் விருந்து வாழும் பெற்றோர்களின் குழந்தைகள் விரும்பத்தகாத பழக்க வழக்கம் உள்ள பெற்றோர்களின் குழந்தைகள் ஒன்று ஆளுமை பிறழ்வுக்கு ஆட்படுகின்றனர்.

பள்ளிக்கூடம்
குழந்தைகளுடைய ஆளுமையை உருவாக்குவதில் பள்ளிக்கூடத்தில் பல காரணிகள் காரணமாக உள்ளன அவை.

மொழி
இயக்கமிகு ஆளுமை வளர்ச்சியில் மொழி முக்கிய பங்கு பெறுகிறது. மொழி பண்பாட்டுடன் தொடர்புடையது. பாடங்கள் கற்கவும் விளக்கவும் உணர்வுகளை வெளிப்படுத்தவும் மொழியே அடிப்படை. மற்றவர்களுடன் மொழி வழி தொடர்பின் காரணமாக ஆளுமையில் பங்கு பெற முடிகிறது.

பண்பாடு
ஆளுமை வளர்ச்சியில் பண்பாடு பெரிய அளவில் செல்வாக்கு. சமூக வாழ்க்கையின் மூன்று முக்கிய கூறுகளான தொழில் திருமணம் பிறருடன் பொருத்த உறவு கொண்டு பழகுதல் ஆகியவற்றில் வெற்றி பெற முனைகின்றனர். இவற்றை பல்வேறு சமூக நிலையங்கள் உருவாக்குகின்றன. உடை உடுத்தும் முறை உண்ணும் முறை குழந்தை வளர்ப்பு திருமணம் நம்பிக்கைகள் மரபுகள் ஆகியவற்றுக்கு அளிக்கப்படும் முக்கியத்துவம் வெவ்வேறு பண்பாட்டு சூழலில் வளரும் குழந்தைகளின் ஆளுமை வளர்ச்சியில் பிரதிபலிக்கின்றன. புவியியல் அமைப்பும் கூட பண்பாட்டிற்கும் நல்ல ஆளுமை வளர்ச்சிக்கும் காரணமாக உள்ளன.

உளவியல் காரணிகள்
ஒருவனுடைய நுண்ணறிவு ஊக்கம் மனப்பான்மை மனவழுச்சி கவர்ச்சி பற்றி போன்றவை ஆளுமையின் மீது செல்வாக்கு செலுத்துகின்றன.
ஊத்திவைக்கப்பட்டவர்களும் ஊக்குவிப்பு இல்லாதவர்களே இருக்கும் இடையே

அடைவில் வேறுபாடு இருப்பது போல் ஆளுமையிலும் வேறுபாடுகள் உண்டு. உளவியல் காரணிகள் ஆளுமையை தீர்மானிக்கின்றன.

ஆளுமை கோட்பாடுகள் :

ஆளுமை பற்றிய கோட்பாடுகள் நான்கு வகைப்படும்

வகைப்பாட்டு கோட்பாடுகள்

1. அடிப்படை உளப்பண்புக் கூறு கோட்பாடுகள்
2. வகைப்பாடு மற்றும் அடிப்படை உளப்பண்புக்கூறு கோட்பாடுகள்
3. உளப் பகுப்பாய்வு கோட்பாடுகள்

வகைப்பாட்டு கோட்பாடுகள்

ஹிப்போ கிரேட்ஸ்ன் வகைப்பாடு
ஹிப்போ கிரேட்ஸ் என்பவர் அரிஸ்டாடிலின் மாணவர். இவர் தனி மனிதனின் இயல்பான உடலமைப்பை கொண்டு ஆளுமையை வகைப்படுத்தி உள்ளார்.
சிடுமூஞ்சி ஆளுமை
குறைந்த மனவெழுச்சி உடல் பலம் அதிகம் கொண்ட உடனடியாக கோபம் கொள்ளக் கூடியவன்.

அழுமூஞ்சிஆளுமை
மனவெழுச்சியில் குறைந்த உடல் பலம் குறைந்த ஒவ்வொன்றிலும் கவலை கொண்டு சந்தோஷம் என்பதே தெரியாதவன்.

தூங்குமூஞ்சி ஆளுமை
மனவெழுச்சியில் பலம் உடல் பலம் அற்ற சோம்பேறி மனவெழுச்சியை கட்டுப்படுத்த கூடியவன் எப்பொழுதும் மகிழ்ச்சியாக இருப்பவன்

சிரி மூஞ்சி ஆளுமை
உடல் பலம் வாய்ந்த சக்தி வாய்ந்த எதையும் கட்டுப்படுத்துபவன். கெட்ட சூழ்நிலையிலும் நம்பிக்கை  தளராதிருப்பவன்.

கிரெட்ச்மரின் வகைப்பாடு

| வ. எ ண் | உடல்வாகு | ஆளுமை | பண்புகள் |
|---|---|---|---|
| 1 | திரண்ட பருத்த கைகளும் எலும்புகளும் | ஷிஸோதைம் | பிறருடன் நெருங்கி பழக மாட்டார் பிரச்சனை பற்றிய |

| | | | |
|---|---|---|---|
| | உடையோர் | | எண்ணிக்கொண்டு நடப்பார் கற்பனை திறன் அதிகம் உள்ளவர் |
| 2 | ஒல்லியாக ஒட்டிய மார்பும் குறுகிய தோள்களும் உடையோர் | ஷிஸோதைம் | மணக்கோளாறின் அடையாளம் |
| நல்ல 3 | உருண்டையான உடலும் வட்ட வடிவமான முகவும் உடையோர் | ஸைக்ளோதைம் | கலகலப்பானவர் நகைச்சுவை மிகுந்தவர் பிறருடன் நெருங்கி பழகுவார் மனவெழுச்சி நிலைகளில் திடீர் மாற்றங்கள் ஏற்படும் உணர்ச்சியும் சோர்வும் மாறி மாறி தோன்றும் மனப்பிணியின் அடையாளம். |

ஷெல்டன்  வகைப்பாடு

ஷெல்டன் என்பாரும் கிரெட்ச்மர் போன்றே உடலாக அடிப்படையில் கீழ்க்கண்ட மூன்று வகை ஆளுமையை விவரிக்கிறார்.

| வ.எண் | உடல்வாகு | ஆளுமை | சிறப்பியல்புகள் |
|---|---|---|---|
| 1 | வயிறும் அதை எடுத்த பாகங்களும் மற்ற பாகங்களை விட பருத்திருத்தல் | விருப்பமுள்ள ஆளுமை | ஓய்வில் விருப்பம் வசதிகளை அனுபவித்தலில் ஆசை நண்பர்களோடு ஈடுபாடு உணவு உறக்கம் போன்றவற்றில் விருப்பம் |
| 2 | ஒல்லியாக மெலிந்து நீண்ட எலும்புகளால் ஆன உடல் அமைப்பு கொண்டவர் | சிந்தனை சார் ஆளுமை | கட்டுப்பாட்டுடன் நடந்து கொள்வது சமூகத் தொடர்புகளில் நாட்டமின்மை வலியைத் தாங்க முடியாமை |
| 3 | தசை வளர்ச்சி மிக்க கட்டான உடல் | செயல் சார் ஆளுமை | மனவளவோடு செயல்படுதல் |

| | | | |
|---|---|---|---|
| | அமைப்பு கொண்டவர் | | துணிச்சல் செயல்களில் ஈடுபாடு தைரியம் செயல்களில் தீவிர ஈடுபாடு வலியினை பொருட்படுத்தாமே |

யூங்கின் வகைப்பாடு

யூ என்பவர் மனிதர்களை அவர்களது சமூக நடத்தைகளை கொண்டு இருவகைகளாக பிரிக்கிறார்.
அகமுகன்
இவன் தனித்து இருப்பதையே அதிகம் விரும்புவான். இவன் வேலை செய்வதைவிட பார்க்க கனவு காண்பதிலேயே அதிக ஆர்வம் உள்ளவனாக இருப்பான். புத்தகங்களை வாசிப்பதில் அதிகம் ஆர்வம் உள்ளவனாக இருப்பான். இவன் தன் கருத்துகளை பேச்சு மூலமாக அழிப்பதை விட எழுத்து மூலமாகவே வெளியிடுவான்.

புறமுகன்
இவன் சமூக நட்புணர்ச்சியுடனும் கவலைகள் அற்றும் காணப்படுவான். இவன் மக்களிடம் நல்ல முறையில் நடந்து கொள்வான் சுதந்திரமாக இருப்பவன் மனவெழுச்சிகளை ஒளிவு மறைவின்றி வெளிப்படுத்துவான்.

லிப்பிட்டின் வகைப்பாடு

இவர் மூன்று வகையான ஆளுமையை கூறுகிறார்

எதேச் சாதிகார ஆளுமை
அதிகார பலம் கொண்டு தன் முடிவுகளை மற்றவர்கள் மீது திணிப்பவன்.

ஜனநாயக பூக்குடைய ஆளுமை
முடிவுகளை பெறுவதில் அனைவரது கருத்துக்களுக்கும் மதிப்பளித்து ஒருமனதாக தீர்மானித்தலை விரும்புபவன்.
அவரவர் விருப்பம் போல் இயங்க அனுமதிக்கும் ஆளுமை
ஒவ்வொருவரும் தனி இஷ்டப்படி இயங்க அனுமதித்து பிறரை கட்டுப்படுத்தக்கூடிய ஆற்றல் இல்லாத தலைமை.

உள்ள பண்பு கூறுகள் அடிப்படையிலான ஆளுமை

கேட்டலின் வகைப்பாடு
- நுண்ணறிவு மிக்க முட்டாள் தனமான
- மனவெழுச்சி முதிர்ச்சி முதிர்ச்சியின்மை
- ஆதிக்கம் பணிவு
- உற்சாகமிக்க மகிழ்வின்மை

- உணர்ச்சியோடு இருத்தல் எதையும் பொருட்படுத்தாமை
- சிந்தனையும் அழகு நர்சியும் கூடிய பண்பாடின்மை
- ஒத்துழைப்பு ஒதுங்கி போதல்
- பரிவு எதிர்ப்பு
- உற்சாகம் சோம்பல்
- உணர்வு மிகுதி எதிலும் ஆர்வம் இன்மை
- நட்பு சந்தேகம்
- முழுமூச்சோடு செயல்படுதல் முறை இன்றி இயங்குதல்

வகைப்பாடு மற்றும் பண்பு கூறு அணுகுமுறை

கோட்பாடு வகைப்பாடு மற்றும் பண்பு கூறுகள் கடந்த கொள்கையாகும். இக்கொள்கை ஹச் வே ஐசங் என்பவரால் வரையறுக்கப்பட்டது. இவரது கருத்துப்படி நான்கு வகை ஆளுமைகள் காணப்படுகின்றன

- அகமுகத் தன்மை
- புற முகத்தன்மை
- நரம்பு  தன்மை நோய்
- கடுமையான சித்த கோளாறு நோய்

உளப் பகுப்பாய்வு கோட்பாடு

நினைவில் உள்ள செயல்களின் செல்வாக்கினை சிறப்பாக குறிப்பிடுகின்றார். சிக்மன் பிராய்ட் என்பவரின் கூற்றுப்படி மனிதன் தன் உடல் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வதில் தன்னை பழக்கிக் கொள்ள இடைவிடாத போராட்டத்தில் ஈடுபடுகிறான். மனம் மூன்று நிலைகளில் செயல்படுகிறது அவை முறையே அடிநிலைமனம்
தனுணர்வு நிலை மனம் மற்றும் மேல்நிலை மனம் ஆகும். இம்மூன்று நிலைகளும் ஒன்றோடு ஒன்று இடைவினை ஆற்றி ஒன்றை ஒன்று பாதித்துக் கொள்கின்றன.

கீழ்நிலை மனம் அல்லது அடிநிலை மனம்

- இதுவே ஆளுமையின் அடித்தளம் ஆகும்.
- இதிலிருந்து பின்னர் ஈகோ மற்றும் சூப்பர் ஈகோ எழுகின்றன.
- இது சின்னஞ்சிறு குழந்தைகளிடமும் உள்ளது மரபு நிலை வழியே பெறப்படும் .
- எல்லா உத்திகளும் இதனுள் அடங்கும். இவற்றுள் பாலூக்கம் பிறர் பால் பலவந்தம் ஆகியவை ஆதிக்கம் பெறுகின்றன.
- இட் எனப்படுவது அஃதுநிலை மனம் அல்லது விலங்கு நிலை மனம் ஆகும்.
- ஒருவரின் அடி மனநிலையில் எனும் இலட்சியங்கள் ஆசைகள் தாகங்கள் இதில் அடங்கும்.
- இதை இன்பத்தை நாடி செயல்படுவதால் நெறிமுறைகள் சட்டங்கள் மதிப்புகள் பின்னுக்கு தள்ளப்படுகின்றன.

- பிற மனநிலைகளின் இயக்கத்துக்கு தேவைப்படும் சக்தியினை கொண்டது. இச்சத்தி எனப்படும்.
- தன் தேவையை பூர்த்தி செய்வதில் மட்டுமே இந்த நிலை மனம் செயல்படுகிறது. இவை முழுமையும் நினைவில் நிலைப்பட்டவை.

ஈகோ
கீழ்நிலை மனதை கட்டுப்படுத்தும் அடுத்த மனநிலையை தான் தன்னுணர்வு நிலைமனம் என்கிறோம். இது தொடக்கத்திலேயே தோன்றுவதில்லை. பின்னர் சூழ்நிலையின் உண்மை நிலைகளுடன் நடத்தை பொருந்தி போக வேண்டிய தேவையின் காரணமாகவே ஈகோ எழுகிறது. எனவே இதன் செயல்கள் உண்மை நிலைமை கொள்கையை சார்ந்து அமைக்கப்பட்டுள்ளது. இட் என்பதை அதன் இச்சைப்படி விட்டுவிட்டால் விளைவுகள் பயங்கரமானதாக இருக்கும். ஈகோ என்பது இட்லி நடவடிக்கைகளை கண்காணிக்கும் ஒரு காவல்காரன் ஆகும் எனவே இது ஆளுமை நிர்வாகி என்று கூறப்படுகிறது.

சூப்பர் ஈகோ
மேல்நிலை மணமானது சூப்பர் ஹீரோ சுமார் 6 வயதில் எழத் தொடங்குகிறது. பெற்றோர்கள் ஆசிரியர்கள் போன்று வலியுறுத்தும் சமூக நடத்தை மதிப்புகள் தரங்கள் அறக்கோட்பாடுகள் போன்றவற்றை குழந்தை தன் உள்ளத்தில் அமைத்தலால் மேல்நிலை மனம் உருவாகிறது. மனசாட்சி வாழ்க்கை குறிக்கோள்கள் ஆகியன மேல்நிலைமனத்தின் கூறுகளாகும்.
ஈகோ சூப்பர் ஈகோ ஆகியவை யாவும் இணைந்து செயலாற்றினால் தான் ஆளுமைச் சமநிலை ஒருவன் இடத்தில் தோன்றும். இதைத்தான் இசைவான ஆளுமை வளர்ச்சி என்று கூறுகிறோம். இதை ஒன்றில் கொன்று முரண்பாட்டால் ஆளுமை வளர்ச்சியில் சிக்கல்களை தோற்றுவிக்கும்.

ஆளுமையை அளவிடல்:.
ஆளுமையை அளவிட இரு முறைகள் பின்பற்றப்படுகின்றன.
1.புறத்தேற்று நுண்முறைகள் 2.புறத்தேற்று அல்லாத நுண் முறைகள்

புறத்தேற்று நுண்முறைகள்

புலன் காட்சி அணுகுமுறை
பொருளறிவோடு இணைத்தறி சோதனை
உருவாக்கும் சோதனைகள்
வாக்கியத்தை பூர்த்தி செய்தல்

புறத்தேற்று அல்லாத நுண் முறைகள்

அகவய முறைகள்
சுயசரிதை சுயமதிப்பீடு மறுமொழி கூறுபவை வினா நிரல் மனப்பான்மை அளவுகோல் ஆளுமை பட்டியல்கள் பேட்டி நாட்ட சோதனைகள் கவர்ச்சி பட்டியல்கள்

புறவய முறைகள்

உற்று நோக்கல் சரிபார்க்கும் பட்டியல் தர அளவுகோல்

உற்றுநோக்கல்

பிறர் அது நடத்தைகளை கூர்ந்து கவனித்தல் உற்றுநோக்கல் எனப்படும்.
கருவிகளின் துணை இல்லாமல் அளவிடுதல் என இம்முறையை கூறலாம்

வகைகள்
பங்கேற்கும் மற்றும் பங்கேற்கா உற்று நோக்கல்
இயற்கையான மற்றும் செயற்கையான உற்று நோக்கல்

திட்டமிடப்பட்ட மற்றும் எதேர்ச்சியாக நிகழ்ந்த உற்று நோக்கல்

பேட்டி அல்லது நேர்காணல்
ஒருவரை நேரில் கண்டு பேசி அவர் நடக்கும் விதத்தையும் கேட்கப்படும் வினாக்களுக்கு பதில் அளிக்கும் தன்மையையும் புற்றுநோக்கி கருத்தில் கொண்டு அவரது ஆளுமை பண்பு கூறுகளின் தன்மை அளவு ஆகியவற்றைப் பற்றிய முடிவுக்கு வர உதவும் முறை பேட்டி அல்லது நேர்காணல் முறையாகும்.

பேட்டியின் வகைகள்
திட்டமிட்ட முறை /நெறிப்படுத்தப்பட்ட முறை
திட்டமிட படாத முறை / நெறிப்படுத்தப்படாத முறை

பேட்டியின் பண்புகள்

பேட்டி இயல்பாகவும் இணக்கமாகவும் அமைய வேண்டும்.
பதில் நன்கு கவனிக்கப்பட வேண்டும்
முழு சுதந்திரம் அளிக்கப்பட வேண்டும்
நோக்கம் தெளிவாக இருக்க வேண்டும்
காலம் வீணாகாமல் விரைவாக நடைபெற வேண்டும்.

வினா வரிசை முறை

இம்முறையில் பல சிறு வினாக்கள் ஒரு தாளில் அச்சடிக்கப்பட்டு சோதனைக்குட்படுவோரிடம் தரப்படும்.

அவற்றில் விடைகளை அத்தாளில் குறிக்க வேண்டும்
தன் நிலையை குறிக்கும் விடையை மட்டும் குறிப்பிட வேண்டும்
விடைகளின் தன்மையிலிருந்து ஆளுமை பண்புகளின் இயல்பினை அறிய முடியும்.

வினா வரிசையில் நிறைகள்

1. இது பல்வேறு நிலைமைகளுக்கு பயன்படுத்தக்கூடிய சிக்கனமான முறையாகும்.
2. இவற்றை பலருக்கு ஒரே சமயத்தில் கொடுக்க முடியும் ஆதலால் காலம் விரயமாகாது. சிக்கனத்தை அளிக்கும்.
3. அதிகமான சிறப்பு பயிற்சி இன்றி தமது வகுப்பறைகளில் ஆசிரியர்களால் இவற்றை பயன்படுத்த முடியும்.

தர அளவுகோல்

ஒருவனது நடத்தையை கூர்ந்து உற்று நோக்கல் மூலமோ அல்லது பேட்டி மூலமோ கண்டறிந்து அவனிடம் காணப்படும் ஆளுமை பண்பு கூறுகளை பற்றி அறிந்த பின்னர் அவற்றின் அளவை திட்டமாக தெரிவிக்கும் முறை தர அளவுகோல் முறை எனப்படும்.

புறத்தேற்று நுண் முறைகள்

ரோர்ஹாக்கின் மைதரச் சோதனை

இச்சோதனையானது 1921 ஹெர்பல் ரோல் ஹார்ட் என்ற சுவிட்சர்லாந்து நாட்டு உலா மருத்துவரால் தயாரிக்கப்பட்டது.

இச்சு சோதனைகள் 10 அட்டைகளைக் கொண்டது
இதில் மைத் தடம் பொருளற்ற சமச்சீரான அமைப்பைக் கொண்ட உருவங்கள் காணப்படும்.
இதில் பத்து அட்டைகள் ஐந்து கருப்பு வண்ண மைத் தடங்கள்
இரண்டு கருப்பும் சிவப்பும் கலந்த
மைத்தடங்கள்
மூன்று பல்வேறு வண்ண தடங்கள்

சோதனையை நடத்துதல்

- சோதனைக்குட்படுவோருக்கு மைத்தடா அட்டைகள் வரிசைப்படி ஒவ்வொன்றாக காட்டப்படும்
- மைதளத்தில் காணும் எல்லாவற்றையும் விவரமாக கூற வேண்டும்
- ஒரு மை தடம் பற்றிய விவரங்களை கூறி முடித்த பின் அடுத்த மையத்தளம் காட்டப்பட வேண்டும்
- இவ்வாறு எல்லாம் வைத்த இடங்களும் காட்டப்பட்ட பின் சோதனைக்கு உட்படுவோரிடம் சோதனையாளர் சில வினாக்களை கேட்பார்.
- வினாக்கள் சோதனை முடிவை நம்பகச் செய்ய உதவுவணவாகும்.

விடைகளை ஆராய்தல்
விடைகளின் மூன்று போர்களை சோதனையாளர் ஆராய்வார்.

ஒருவர் அளிக்கும் பதில்களில் மூன்று அம்சங்கள் பரிசீலிக்கப்பட்டு அவரின் ஆளுமை பண்பு தீர்மானிக்கப்படுகிறது.

| மைத்தடங்கள் காணப்படும் பொருட்கள் | மை தடத்தின் பகுதிகள் / இட அமைவு | விடையின் தன்மையை நிர்ணயித்தல் காரணிகள் |
|---|---|---|
| மனிதர்கள் உயிரற்ற பொருட்கள் விலங்குகள் மனிதர்களால் தயாரிக்கப்பட்ட பொருட்கள் செடி கொடிகள் உட்கூறுகளின் விவரம் | மைதடத்தின் முழுபகுதி வழக்கமான விரிவான துளங்கள் சிறிய வழக்கமான தூளங்கள் புதிய விளக்கங்கள் மிகச் சிறிய விவரங்கள் அபூர்வமான விவரங்கள் | உருவம் வண்ணம் இயக்கம் |

முர்ரே மார்கனின் பொருளறிவோடு இணைத்தறி சோதனை

- இச்சாதனையில் 20 படங்கள் உள்ளன
- முதலில் 10படங்களும் பிறகு 10 படங்களும் முறைப்படி காட்டப்படும்
- படங்களில் எத்தகைய நிகழ்ச்சிகள் சித்தரிக்கப்படுகின்றன
- எக்காரணத்திற்காக நிகழ்ந்திருக்கலாம் இவற்றின் விளைவுகள் எவையாக இருக்கக்கூடும் போன்ற கேள்விகள் சோதிக்கப்படுபவரிடம் கேட்கப்படும்
- சோதிக்கப்படுவோரின் ஆளுமையை அவர் கூறும் கதைகளை கொண்டு அறியலாம்.
- சோதிக்கப்படுவோரிடம் காட்டப்படும் படங்களில் எப்படத்துடன் அவர் ஒன்றில் போகிறார் என ஆராய்தல்.
- கதைகளிலும் படங்களிலும் எத்தகைய மனநிலைகள் திரும்பத் திரும்ப தோன்றுகின்றன என்பது கவனிக்கப்படுதல் வேண்டும்.